# மீட்டுருவாக்க நோக்கில் கண்ணகியின் வாழ்வியல்

*முனைவர் ச. பிரியதர்சினி*
தமிழ்த்துறைத் தலைவர்
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்

**மலர்: 4**

**இதழ்: 3**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2020**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

இலக்கியப் படைப்புகளில் அவை தோன்றிய அவ்வக் காலத்தில் சமூக அமைப்புகள் சிந்தனைகள் மற்றும் படைப்பாளர்களின் சமூக, பொருளாதார அரசியல் கண்ணோட்டங்கள் இடம் பெறுதல் இயற்கையாகவே அமைகிறது. சமுதாயத்தில் காலப்போக்கில் ஏற்படுகின்ற மாற்றங்களின் விளைவாகவும் படைப்புகள் உருவாக்கப்படுகின்றன. மாறியுள்ள சமூகப் பின்புலத்தை அடிப்படையாகக்கொண்டு, அந்தச் சூழலில் எழும் பிரச்சினைகளை அவ்வாறே சித்திரிப்பது பரவலாகக் காணக்கூடியது. அப்பொதுப் போக்கிலிருந்து மாறுபட்டு இலக்கிய வகைகளின் ஏதேனும் ஒன்றைக் கருவியாகக் கொண்டு தொன்மக் கதைகள், புராணக் கதைகள், கதைப் பாத்திரங்கள் போன்றவற்றைப் புதிய சிந்தனைகளுடனும், மாற்றங்களுடனும் மீட்டுருவாக்கம் செய்யும் படைப்புக்களும் இன்று தோன்றி வருகின்றன.

மீட்டுருவாக்கம் என்பதற்கு மீண்டும் உருவாக்குதல் என்பது பொருள். இது பழைய இலக்கியங்களிலும், தொன்மக் கதைகளிலும் இடம் பெற்றுள்ள செய்திகளைப் பிரித்தெடுத்துக் காலத்திற்கு ஏற்றாற்போல மாற்றங்களைச் செய்து மீண்டும் உருவாக்குவதலை அடிப்படையாகக்கொண்டிருக்கிறது.

“பழைய கதைகளையும், அடிக் கருத்துக்களையும் ஐதீகங்களையும் கொண்டு தத்தம் காலத் தேவைக்கு ஏற்ப இலக்கியம் படைப்பது எல்லாக் காலங்களிலும் புலவர்களின் முயற்சிகளில் ஒன்றாக இருந்திருக்கிறது” என்பார் கைலாசபதி.

இன்றைய சமுதாய மாற்றங்களின் விளைவாகப் படைப்புகள் படைக்கப்படும் காலத்துச் சமூக நிகழ்வுகளையும், எண்ணங்களையும் விளக்கும் வகையில் கதைகளில், இலக்கியங்களில் மாற்றங்களைச் செய்து புதுவது புனைவது இலக்கிய மரபாக இன்றைய படைப்பாளர்களிடம் இருந்து வருகிறது எனலாம்.

### மீட்டுருவாக்கத்தின் நோக்கம்

இன்றைய சமுதாயத்தில் மாறி வருகின்ற காலச் சூழலுக்கு ஏற்ப சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முயல வேண்டும் என்பதே மீட்டுருவாக்கப் படைப்பின் நோக்கமாகும்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் எழும் அவ்வக்கால இலக்கியங்களில் காணப்படுகின்ற மதிப்பீடுகள், சிந்தனைகள் ஆகியன அந்தக் காலத்திற்கு மட்டுமே பொருந்தி வருவன். அவ்வக்கால மதிப்பீடுகள், சிந்தனைகள் ஆகியன இன்றைய காலகட்டத்திற்குப் பொருந்தி வாரா. எடுத்துக்காட்டாக, அன்று நளாயினி கணவனுக்குக் கட்டுப்பட்டவளாக, அவள் சொல்கின்ற கருத்துக்களுக்கு மறுவார்த்தைக் கூறாதவளாகத்தான் படைக்கப்பட்டிருக்கிறாள். அக்காலச்சூழலின்படி பெண்என்பவள்மரபு சார்ந்தவளாகத்தான் இருந்திருக்கிறாள். கணவன் நோய்வாய்பட்ட நிலையிலும் தாசி வீட்டுக்குச் செல்ல விரும்புவதகாகத் தன் மனைவியிடமே கூறுகிறான். அவளோ அவனது விருப்பத்தை நிறைவேற்றக் கணவனைக் கூடையில் சுமந்து செல்கிறாள். கணவனது சொல்லுக்குக் கட்டுப்பட்டவளாக அவன் விருப்பத்தை நிறைவேற்றிய பெண் என்ற அளவிலே அவள் பெரிதும் பாராட்டப் படுகின்றாள். இதற்கு, அந்தக்காலச் சூழலும் அன்றைய காலகட்ட மதிப்பீடுமே காரணம் எனலாம்.

இன்றைய நிலையில் மேற்சொல்லப்பட்ட நிலை ஒரு பெண்ணுக்கு ஏற்படுமெனில் அவள் அதனை நிறைவேற்றுவாளெனக் கூற இயலாது என்ற நிலையில் கணவனை விட்டு விலகத் துணியும் பெண்களும் உண்டு. இன்றைய காலகட்டச் சிந்தனை இன்றைய மதிப்பீடு இதுதான்.

### கொங்கைத் தீ

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று சிலப்பதிகாரம். சிலப்பதிகாரம் கண்ணகியின் கதையை இந்திரா பார்த்த சாரதி அவர்கள் கொங்கைத் தீ நாடகமாக மீட்டுருவாக்கம் செய்துள்ளார்.

இந்நாடகத்தில் ஆசிரியர் சிலப்பதிகாரக் கதையை மாற்றாமல் அதில் உள்ள செய்திகளையும், மன உணர்வுகளையும் புதிய நோக்கில் விளக்கம் செய்து மீட்டுருவாக்கத்தைச் செய்துள்ளார். செய்திகளை வெளிப்படுத்துகின்ற பாத்திரத்தின் மூலம் இன்றைய சமுதாயத்தில் உள்ள பெண்களின் நிலையைச் சித்திரித்துள்ளார்.

ஆணாதிக்கம்தான் பெண்ணை அடக்கி ஆள்கிறது. பெண்ணானவள் சார்ந்து வாழ்கின்றவளாக, ஆனால் விரும்பப்படுகின்ற நுகர் பொருளாகத்தான் அடக்கி ஆளப்படுகிறாள் என்பதை அந்நாடகம் எடுத்துக்காட்டுகிறது. அடக்கி ஆளப்பட்ட பெண்ணின் மன உணர்வுகள் அவளால் தாங்க இயலாது என்ற நிலை வரும்போது அவளின் சீற்றம் எத்தகைய விளைவுகள் ஏற்படுத்துகிறது என்பதைக் கண்ணகி மதுரையை எரிப்பதன் மூலம் அறிய முடிகிறது.

பெண்ணானவள் குட்டக்குட்டக் குனியாமல் நிமிர்ந்து நின்று போராட வேண்டும் என்பதை நாடகத்தின் மூலம் உணர்த்துகிறார் ஆசிரியர். அன்று முதல் இன்று வரை பெண் மீது செலுத்தப்பட்டு வரும் ஆணாதிக்க அடக்கு முறைகள் அனைத்தும் பெண்ணினம் முழுமைக்கும் பொதுவாகவே இருப்பதால் இந்நிலை மாறப் பெண்களே போராட வேண்டும் என்ற கருத்தையும் இந்நாடகம் உணர்த்துகிறது.

### கொங்கைத் தீ நாடகத்தின் வழி புலப்படும் புதிய செய்திகள்

கொங்கைத் தீ நாடகம் சிலப்பதிகாரக் காப்பியக் கதையை மையமாககொண்டு

அமைகிறது. இந்நாடகத்தில் இடம் பெறுகின்ற கதை நிகழ்ச்சிகள் புகார்க்காண்டம், மதுரைக் காண்ட நிகழ்ச்சிகளுடன் முடிவடைகின்றன. வஞ்சிக் காண்ட நிகழ்ச்சிகள் இடம்பெறவில்லை. இந்நாடகம் சிலப்பதிகாரப் பாவிகத்துக்கு மாறான மூன்று செய்திகளை மையமாகக் கண்டு அமைகிறது. இச்சமுதாயத்தில் பெண்ணானவள் ஆணாதிக்கத்தினால் எவ்விதம் அடக்கி ஆளப்படுகிறாள் என்பதைச் சுட்டிக் காட்டுதல். கண்ணகி பத்தினித் தெய்வமாகப் படாமை. விதி என ஒன்று இல்லை ஒவ்வொருவருடைய குண அமைப்புதான் விதியாக மாறுகிறது எனக் காட்டல். இவ்வாறு செய்திகளில் மாற்றத்தை ஆசிரியர் வெளிப்படுத்தி இருக்கிறார்

**கதைப்பாத்திரங்களின் வழி மாற்றங்கள்**

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடத்தக்க கதை மாந்தர்களின் பண்பு நலன்களிலும் செயல்பாடுகளிலும், உரையாடல்களிலும் காலத்திற்கேற்ற மாற்றங்களைச் செய்வதன் வழி புதிய படைப்பாகக் கொங்கைத் தீ நாடகம் ஆக்கப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரம் மையத் தலைவியாக விளங்கும் கண்ணகி பாத்திரத்தின் வாயிலாக, சிலம்பில் காண இயலாத சில புது இயல்புகளைப் புகுத்தி மாற்றம் செய்கிறார் ஆசிரியர் இந்திரா பார்த்தசாரதி.

**கணவனை இடித்துரைத்தல்**

தமிழில் தோன்றிய தொன்மையான இலக்கண நூலான தொல்காப்பியம் பெண் மனைவி என்ற நிலைமை அடைகின்ற போது அவளுக்கென்ற சில விதிகளையும், கடமைகளையும் வகுத்துள்ளது.

**கற்புங்காமமும் நாற்பாலொழுக்கமும்
மெல்லியர் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்**
**(கற்பியல்.11)**

என்ற கூற்றுக்கு ஏற்பவே கண்ணகியும் கடைமையை உணர்த்துவளாகப் பழக்கபடுத்தப் பட்டிருக்கின்றன. கணவன் தன்னை விட்டுப்பிற பெண்களைநாடிச்சென்றாலும் பெண்ணானவள் அவனை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவனது தவறுகளைச் சுட்டிக் காட்டுதல் கூடாது என்பதைத் தான் இலக்கியங்களும், சமுதாயமும் பெண்ணுக் குக் கற்பித்துள்ளன என்பதைப் பின்வரும் நூற்பாக்களின் மூலம் அறியலாம்.

**தாய் போற் கழறித் தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப
கவவொடு மயங்கிய காலை யான**
**(தொல்.170)**

**தற்புகழ் கிளவி கிழவன் முற்கிளத்தல்
எத்திறத்தானும் கிழத்திக்கு இல்லை**
**(தொல்.178)**

மேற்குறித்த இயல்பிலிருந்து மாறாதவளாக சிலம்பின் கண்ணகி அமைந்திருக்க, கொங்கைத் தீ நாடகத்தில்வரும் கண்ணகியோ அவனை இடித்துரைப்பவளாகக் காட் டப்படுகிறாள்.

**தன்னுணர்வை வெளிப்படுதல்**

கோவலன் கணிகையரை நாடிச் செல்கின்றபோதும் கணவனை எதிர்த்துத் தன்னால் எதுவும் கேட்க இயலவில்லை எனத் தன் இயலாமை குறித்து வருந்து பவளாகக் கண்ணகி இந்நாடகத்தில் படைக்கப்பட்டிருக்கிறாள். தன் இயலாமை குறித்துத் தன்னையும், இச்சமூகத்தையும் நொந்து கொள்கிறாள்.

**இந்தச் சமூக சட்டம் கடமைமிக்க மனைவியின்
வாயைத் தான் அடைத்து வைத்திருக்கிறது**
**(கொங்கைத்தீ. ப.31)**

என அவள் வருந்துவதை அறியமுடிகிறது. சிலம்பில் கண்ணகி இக்காரணத்திற்காக வருந்தப்படுபவளாகப் படைக்கவில்லை.

"கொங்கைத் தீ" நாடகத்தில் கண்ணகி தனக்கு வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பேசுகின்றவளாகப் படைக்கப்பட்டிருக்கிறாள்.

கணவன் கணிகையரை நாடிச் சென்று விட்டு நீண்ட காலத்திற்குப் பிறகு வருகிறான். இந்நிலையில் கோவலன் கண்ணகியிடம் வணிகம் செய்யத்தான் முதலீடு இல்லை. வணிகம் செய்வது எப்படி? என்று கேட்கும்நிலையில் "கணிகையருக்குத் தரப்பொருளேதும் இல்லையா?" என ஏளனத் தன்மையுடன் அவனிடம் கேட்கிறாள். மேலும் அவள் உங்கள் தந்தையிடம் சென்று உதவி கேளுங்கள் என்ற யோசனையையும் சொல்கின்றாளேதவிர சிலம்பைக் கொடுக்க முன் வரவில்லை. இறுதியிலும்கூட ஒருவிதத் தயக்கத்துடனேயே சிலம்பைக் கொடுக்க முன் வருகிறாள். சிலம்பில் கோவலன் இவ்வாறு கேட்டதும் கண்ணகி,

***நலம் கேழ் முறுவல் நகைமுகம் காட்டி***
***சிலம்பு உள கொண்மின்***
***(சிலம்பு.ப.153)***

எனத் தானே வலிந்து குறிப்பிடுவதாக இளங்கோ காட்டுகிறார்.

கொங்கைத் தீ நாடகத்தில், "கோவலன் சிலம்பை விற்க மதுரைக்குப் புறப்படு என்கிறான். அந்நிலையில் கண்ணகி நானுமா? எனக் கேட்கிறாள். நீண்ட நாட்களுக்குப் பிறகு பிரிந்த கணவன் தன்னுடன் வந்திருக்கிறான். இந்நிலையில் மீண்டும் பிரிவா? இல்லை பிரியா வாழ்க்கையா? என்ற நிலையில், அவன் புறப்படு என்று சொல்லி விட்டதும் அவள், (திடுக்கிட்டு) நானுமா? என்று கேட்டு உறுதி செய்து கொள்கிறாள்."

### அடக்கப்பட்ட உணர்வுகளின் தாக்கம்

கோவலன் கள்வன் எனக் குற்றம் சாட்டப்பட்டுக் கொலை செய்யப்படுகிறான். கொங்கைத் தீ நாடகத்தில கணவனை இழந்த கண்ணகியின் உணர்வுகள் பின்வருமாறு சித்தரிக்கப்பட்டுள்ளன.

***பூம்புகாரில் கணவனிருந்தும் கைம்பெண்***
***மதுரையில் கணவனையிழந்த கைம்பெண்***
***மண வாழ்க்கையில் நான்***
***கண்டதென்ன***
***காணாதது என் கணவனின் உறவு***
***(கொங்கைத்தீ. ப.61)***

கண்ணகி தன் கணவன் இருந்தும் தன்னால் வாழ இயலவில்லையே எந்தவிதமான உறவையும், இன்பத்தையும் கணவனுடன் கூடி அனுபவிக்கவில்லையே என்ற உள்ளுணர்வினால், துன்பத்தினால் பாதிக்கப்பட்டு புலம்புகிறாள். இச்சமுதாயத்தில் கணவனை இழந்த பெண் கைம்பெண்ணாய் வாழமுடியாது என்ற அவலத்தை மட்டுமே சிலம்பு சுட்ட, அவனுடன் கூடி வாழ்ந்த போதும் கூட அவள் இழந்திருந்த வாழ்வைக் "கொங்கைத் தீ" நாடகத்தின் வழியே காட்டுகிறார் இந்திரா பார்த்தசாரதி.

சிலம்புக் கண்ணகி "கள்வனோ என் கணவன்" என ஆவேசமாக கேட்பவள் ஆயின் "கொங்கைத் தீ" நாடகத்திலோ, தன் கணவன் கள்வன் என்பதற்குப் புது விளக்கம் தருகிறாள் அவள்,

***ஆம் கள்வன்தான்***
***பூம்புகாரில் கணிகையர் பலர்***
***உளம் கவர்ந்த கள்வன்***
***மதுரையில் அது நிகழ்வதற்கு***
***வாய்ப்பில்லாமல் கொன்று***
***விட்டாய் என்கிறாள்***
***(கொங்கைத்தீ. ப.61)***

தன் கணவனுடன் எந்தவிதமான உறவும் இல்லையே என்ற மனப்பாதிப்பின் விளைவாகத் தன் கணவனின் இயல்பைத்

தன்னையும் அறியாமல் வெளிப்படுத்து கிறாள் அவள். மேலும் தன் கணவன் தனக்குச் செய்த துரோகத்துக்காகவே சிலம்பு அவனைப் பழிவாங்கிவிட்டதாகவும் எண்ணுகிறாள்.

**எதற்காக எஞ்சியது?**
**அவர் உயிரைப் பறிக்கவா?**
**அவர் எனக்குச் செய்த துரோகத்துக்காக**
**அவரை அது பழி வாங்கிவிட்டதா?**
**(கொங்கைத்தீ. ப.61)**

தன் கணவன் செய்த தவற்றைத் தட்டிக் கேட்க இயலாத நிலையில் இருந்து கண்ணகி தனக்குப் பதில் சிலம்பு தன் கணவனைப் பழி வாங்கிவிட்டதாக உணர்கிறாள். கணவனை இழந்த கண்ணகி இவ்வாறு புலம்புவதன் வழி, அவளின் பாதிக்கப்பட்ட உள்ளுணர்வினைக்காட்டக் "கொங்கைத்தீ" நாடகம் முயல்கிறது. பாண்டிய மன்னன் தன் தவறை உணர்ந்து, இறந்து விடும் நிலையில் கண்ணகி,

**பெண்மையின் சீற்றத்துக்கு**
**முதல் பலி.....**
**இது எனக்குப் போதாது**
**(கொங்கைத்தீ. ப.66)**

என்கிறாள், மேலும் அவள் தன்னை "அர்த்தநாரீஸ்வரர்" எனக் கூறுகிறாள்.

கணவனின் நடத்தையின் காரணமாகத் தன் இன்பத்தை இதுகாறும் இழந்ததின் காரணமாக அடக்கி வைத்த உணர்வுகள் இவ்விதமாய் வெளிப்படுவதைப் பின்வரும் கூற்றுக்களின் மூலம் அறியலாம்.

**யார் இறைவன்?**
**நானே இறைவன்!**
**ஒரு பக்கம் பெண்**
**இன்னொரு பக்கம் ஆண்**
**அர்த்த நாரீஸ்வரர்**
**(கொங்கைத்தீ. ப.67)**

என்று கூறுகிறாள். எந்த ஆணையும் சார்ந்திருக்கும் தேவை ஏற்படக்கூடாது என்பதை இதன் வழி அவள் நுட்பமாக உணர்த்துகிறாள். கணவனை இழந்த வேதனையில் அவள் எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கிறாள் என்பதை இதன் வழி அறிய முடிகிறது.

## முடிவுரை

சிலம்புக் கண்ணகி எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்பவளாகப் படைக்கப்பட்டிருக்க, இந்நாட்டில் அடக்கி வைக்கப்பட்ட பெண்ணின் உணர்வுகள், மனப்பாதிப்புகளைக் கண்ணகி பாத்திரத்தின் வழி விரிவாக அறிய முடிகிறது. கண்ணகியின் பாத்திரப் படைப்பும் அவளது சிந்தனைகளும் கூற்றுகளும் பழமையிலிருந்து மாறுபட்டுப் புதுக்கவிதைகளுக்கு அழுத்தம் சேர்க்கின்றன. காலத்திற்கேற்ப, சமுதாய விழிப்புணர்வின் வளர்ச்சிக்கேற்ப கருத்துக்களும் சிந்தனைகளும் மதிப்பீடுகளும் மாறும் என்பதைத்தான் தற்கால மீட்டுருவாக்கப் படைப்புகள் மறைமுகமாக உணர்த்துகின்றன எனலாம்.